அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் போராட்டத்திலேயே வாழ்ந்தார்கள்!

‘திராவிடமாடல்’ ஆட்சியில் விவசாயிகள் மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள்!

சட்டப் பேரவையில் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பெருமிதம்!

சென்னை, பிப். 21 - சட்டப் பேரவையில் இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி வேளாண்மை வளர்ச்சி விகிதம் குறைந்துள்ளதாக குறிப்பிட்டு பேசினார்.

அதற்கு வேளாண்மைத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் பதிலளித்து பேசுகையில் கடந்த கால 10 ஆண்டுகால ஆட்சியில் விவசாயிகள் போராட்டம் போராட்டம் என்றே வாழ்ந்தார்கள். தற்போது விவசாயிகள் மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள் என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

இது குறித்து பேசியதாவது:

அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வேளாண்மை வளர்ச்சி விகிதம் குறைந்துள்ளது என்று புள்ளிவிவரங்கள் கூறினார் . அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 2012-2013 முதல் 2020-2021 வரை சராசரியாக 1.36 சத விகிதம் ஆக இருந்தது. தற்போது தி.மு.க ஆட்சிக்கு வந்த பிறகு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுடைய ஆட்சியில் தனியாக வேளாண்மை நிதிநிலை அறிக்கை தயார் செய்யப்பட்டு, அதனுடைய பலனாக 2021-2022 முதல் 2024-2025 வரை 3.03 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது. வேளாண்மை வளர்ச்சி சதவிகிதம் உயர்ந்திருக்கிறது. விவசாயிகளும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். விவசாயிகள் தற்போது ஏதும் போராட்டங்கள் இல்லாமலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் விவசாயிகள் போராட்டம், போராட்டம் என்று 10 ஆண்டுகாலம் போராட்டத்திலேயே வாழ்ந்தார்கள். ஆனால், தற்போது வேளாண் துறையிடைய வளர்ச்சி என்பது பல திட்டங்களை உருவாக்கியதன் காரணமாக உற்பத்தியில் வளர்ச்சியும் அடைந்திருக்கிறது. விவசாயிகளும் மகிழ்ச்சியாக இருக்கின்றார்கள் என்பதை எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருஉத்தரகோசமங்கை – திருப்புல்லாணி – பிரப்பண்ண வலசை வழியாக

இராமேசுவரம் செல்லக்கூடிய ஒருவழிப்பாதையை - இருவழித் தடமாக மாற்றுக!

சட்டப்பேரவையில் – இராமநாதபுரம் காதர்பாட்சா முத்துராமலிங்கம் கோரிக்கை!

சென்னை, பிப். 21 - சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது இராமநாதபுரம் தொகுதி காதர்பாட்சா முத்து ராமலிங்கம்கேட்ட கேள்வியும், அமைச்சர் எ.வ.வேலு அளித்த பதிலும் வருமாறு:

காதர்பாட்சா முத்து ராம லிங்கம்: திருஉத்தர கோசமங்கை, திருப்பு ல்லாணி, பிரப்பண்ண வலசை வழியாக இராமேஸ்வரம் செல்லக்கூடிய ஒருவழித் தடத்தை இருவழித் தடமாக மாற்றிக் கொடுக்கும் பட்சத்தில், இராமேஸ்வரம் செல்லக்கூடிய பக்தர்கள் அதிக போக்குவரத்து நெரிசல் இல்லாமல், மாற்றுச்சாலையில் செல்ல வசதியாக இருக்கும். முதலமைச்சர் அவர்கள் இராமேஸ்வரத்தை ஆன்மீகம் கலந்த சுற்றுலாத் தலமாகக கடந்த நிதி யாண்டிலே பல்வேறு அறிவிப்புகளைத் தந்திருக்கிறார்கள். அமைச்சர் அவர்களிடத்தில் இதுகுறித்து நான் ஏற்கெனவே கோரிக்கை வைத்திருக்கிறேன். அந்த ஒரு வழித் தடத்தை, இரு வழித்தடமாக அமைக்கின்றபோது, இராமேஸ்வரம் செல்லக்கூடிய பக்தர்கள் மாற்றுப் பாதையில் செல்வதற்கு ஏதுவாக இருக்கும். மூன்று பிரசித்தி பெற்ற ஆலயங்கள் இருக்கின்ற காரணத்தினால், அச்சாலையை இருவழிச் சாலையாக அமைத்துத் தரும்படி தங்களிடம் கோரிக்கை வைக்கிறேன்.



அமைச்சர் எ.வ. வேலு: சென்ற ஆண்டு நானே இராமேஸ்வரம் சாலை சம்பந்தமாக பார்ப்பதற்கு சென்றபோது, சட்டமன்ற உறுப்பினர் இந்த கோரிக்கையை வைத்தார் . இந்த போக்குவரத்து அடிப்படையில் இரண்டு முடிவு எடுக்க வேண்டிய சூழ்நிலை. ஒன்று, அந்த கூட்டங்களைக் கட்டுப்படுத்துவதற்கு புறவழிச் சாலை அமைப்பது என்று முடிவு செய்யப்பட்டு, ஒரு alignment எடுத்திருக்கிறோம். அதற்கு வேண்டிய நிலஎடுப்பு பணிக்கு வேண்டிய கோப்புகள் தயாராகி, அதற்கு வேண்டிய பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மற்றொன்று, நேரடியாக அவர் சொல்வது இருவழிச் சாலையாக மாற்ற வேண்டுமென்று கேட்பது ஒரு நியாயமான கோரிக்கைதான். ஏனென்றால், ஆன்மீகக் கடனை ஆற்றுவதற்காக தமிழ்நாடு மட்டுமல்ல, வட இந்தியாவிலிருந்தும் அதிகமானோர் இராமேஸ்வரத்திற்கு வருவதை நாம் பார்க்கிறோம். அதனால், இந்த இரண்டு கோரிக்கையும் முன்னுரிமை அடிப்படையில் இப்பொழுது DPR தயாரிக்கின்ற பணி அல்லது நிலஎடுப்புப் பணிகள் என்ற அடிப்படையில் இருக்கிறது.

அடுத்த நிதி யாண்டிலே அந்த இரண்டு சாலைகளுக்கும் முக்கி யத்துவம் தரப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

இராஜபாளையம் தொகுதி –

சேத்தூர் பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும்!

சட்டப்பேரவையில் – ராஜபாளையம் எஸ்.தங்கபாண்டியன் கோரிக்கை!

சென்னை, பிப். 21 - சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது ராஜபாளையம் உறுப்பினர் எஸ்.தங்கபாண்டியன் கேட்ட கேள்வியும் அக்கேள்விக்கு அமைச்சர் கே.என்.நேரு அளித்த பதிலும் வருமாறு:

எஸ். தங்கப்பாண்டியன்: ராஜபாளையம் தொகுதி, சேத்தூர் பேரூராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

அமைச்சர் கே.என். நேரு. விருதுநகர் மாவட்டம், சேத்தூர் பேரூராட்சியானது 18 வார்டுகளை உள்ளடக்கியது. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இப்பேரூராட்சியின் மக்கள் தொகை 20,228 ஆகும். தற்போதைய தோராய மக்கள்

இப்பேரூராட்சியில் 51 கி.மீ. நீளத்திற்கு சாலைகளும், சுமார் 26 கி.மீ. நீளத்திற்கு மழைநீர் வடிகால்களும் அமைந்துள்ளன. சேத்தூர் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைக்க போதிய இட வசதி இல்லை. தற்போதைய வழிகாட்டுதலின்படி பேரூராட்சியின் மக்கள்தொகை, வெளியேறும் கழிவுநீரின் அளவு, பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான மூலதன செலவு மற்றும் பராமரிப்பு செலவு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு 1 இலட்சத்திற்கும் குறைவான மக்கள்தொகை கொண்ட உள்ளாட்சி அமைப்புகளில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றாக கசடு கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன்படி சேத்தூர் பேரூராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்ட த்திற்கு மாற்றாக, கசடு கழிவு மேலாண்மைத் திட்டம் ரூ.8.33 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த நிருவாக அனுமதி வழங்கப்பட்டு, 23.1,2026 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது .

எஸ். தங்கப்பாண்டியன்: கடந்த வெள்ளிக்கிழமை காலை 5 மணியளவில், 1 கோடியே 31 இலட்சம் குடும்பத் தலைவிகளுக்கு அவர்களின் மனம்குளிர 5 ஆயிரம் ரூபாய் வங்கிக் கணக்கில் செலுத்தி, அவர்களின் மனதில் பால் வார்த்த முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 5 ஆயிரம் ரூபாய் என்பது பணம் மட்டுமல்ல; யாருக்கும் அஞ்சாத ஓர் அப்பாவின் அன்பு மனம் படைத்த முதலமைச்சர் அவர்களுக்கு கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ராஜபாளையம் தொகுதி, சேத்தூர் பேரூராட்சியில் பாதாள சாக்கடை அமைக்க, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் இப்போதுள்ள மக்கள்தொகையை எடுத்துக்கொண்டால் 25 ஆயிரத்திற்கும்மேல் உள்ளது. எனவே, அப்பகுதியில் பாதாள சாக்கடை அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

அமைச்சர் கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, பதில் அளித்திருக்கிறோம். 1 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள்தொகை இருக்கும் பகுதிகளில் மட்டும்தான் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது. அதற்கு குறைவான மக்கள்தொகை இருக்கின்ற பகுதிகளில், சாலைகளும் குறைவாக இருக்கின்ற பேரூராட்சிகளில் பழைய சாலைகள் குறுகளாக இருக்கின்றன. அதில் மழைநீர் வடிகால்கள் தற்போது புதிதாக கட்டப்பட இருக்கிறது. எனவே, அப்பகுதிகளில் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்த ஆரம்பித்தால் சாலைகள் மிகவும் பழுதடைந்து இரண்டாண்டு காலம், மூன்றாண்டு காலம் மிகவும் சிரமமாக இருக்கும். அதற்கு மாற்றான திட்டமா கத்தான் கசடு கழிவு மேலாண்மைத் திட்டத்தை அப்பகுதியிலே 9 கோடி ரூபாய் செலவில் நம்முடைய அரசு அதனை அமல்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு, பணிகள் தொடங்கப்பட இருக்கிறது. எனவே, பாதாள சாக்கடைத் திட்டத்தை அப்பகுதியில் செயல்படுத்துவதற்கு எதுவும் ஏதுவாக அரசின் பரிசீலனையில் இல்லை.

எஸ். தங்கப்பாண்டியன்: கசடு கழிவு மேலாண்மைத் திட்டத்தை அமைத்துக் கொடுத்த அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ராஜபாளையம் தொகுதி, சேத்தூர் பேரூராட்சி விவசாயிகள் அதிகம் கொண்ட பகுதியாக உள்ளது. ஏற்கெனவே, பேரூராட்சியிலிருந்து அவர்களுக்கு உழவர் களம் அமைத்துக் கொடுத்திருக்கிறார்கள். நெல் சேமிப்பு கூடமும் அமைத்துக் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வரு வார்களா ?

அமைச்சர் கே.என். நேரு: அருகில் அர. சக்கரபாணி அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார். அருகிலே உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி அவர்கள் இருக்கிறார். பல இடங்களில் நெல் godown கட்டப்பட்டு வருகிறது. இப்போது பிரச்சினை என்னவென்று சொன்னால், அனைத்து விவசாயிகளும் நேரடியாக அரசுக்குத்தான் நெல்லை விற்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். காரணம், கூடுதலான தொகை விவசாயிகளுக்கு கிடைக்கிறது. அதனால், அரசு சார்பாக பல்வேறு நடவடிக்கைகள்— நான் டெல்டா பகுதியில் இருக்கின்ற காரணத்தினால் எனக்கு தெரியும். பல godowns கட்டப்பட்டு வருகிறது. ராஜ பாளையம் தொகுதியிலும் godown கட்டுவதற்கு மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களுக்குப் பரிந்துரை செய்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான ‘திராவிட மாடல்’ ஆட்சிதான் 2026–ல் அமையும்!

மாதனூர் எல்லைப் பகுதியில் பயணியர் விடுதி கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்!

சட்டப் பேரவையில் – ஆம்பூர் அ.செ.வில்வநாதன் கேள்விக்கு – அமைச்சர் எ.வ.வேலு பதில்!

சென்னைசு, பிப்.21 - சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது, ஆம்பூர் தொகுதி உறுப்பினர் அ.செ.வில்வநாதன் கேட்ட கேள்வியும், அக்கேள்விக்கு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அளித்த பதிலும் வருமாறு:

அ.செ.வில்வநாதன் : ஆம்பூர் தொகுதி, குடியாத்தம்கடாம்பூர்கைலாசகிரிவாணியம்பாடி சாலையை மேம்படுத்த அரசு முன்வருமா?

அமைச்சர் எ.வ. வேலு, ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் கோரியுள்ள சாலையானது 43 கிலோ மீட்டர் நீளம் கொண்ட மாநில நெடுஞ்சாலையாகும். இதில் முதலில் 20 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலையானது குடியாத்தம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சாலை. இருவழித் தடமாக கொண்ட அந்த சாலைப் பகுதி நிலுவையில் உள்ளது. மீதமுள்ள 23 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலையானது ஆம்பூர் சட்டமன்றத் தொகுதியைச் சார்ந்தது. இவற்றில் கடந்த 3 ஆண்டுகளிலே 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 21 கிலோ மீட்டர் நீளத்திற்கு இருவழிச் சாலையாக அகலப்படுத்தப்பட்டு சாலை நல்ல நிலையில் இருக்கிறது. நடப்பாண்டில் 1.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இரண்டு கிலோ மீட்டர் நீளமுள்ள சாலையை மேம்பாடு செய்யும் பணி நடைபெற்று வருகிறது

அ.செ. வில்வநாதன்: என்னுடைய ஆம்பூர் சட்டமன்றத் தொகுதியில் அனைத்து சாலைகளையும் மேம்பாடு செய்து தந்த முதலமைச்சர் அவர்களுக்கும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஆம்பூர் ரெட்டித் தோப்பு இரயில்வே மேம்பாலம் பணியினை மேற்கொள்ள அரசு முன்வருமா , மேலும், திருப்பத்தூர் மாவட்ட ஆரம்ப எல்லைப் பகுதியாக ஆம்பூர் தொகுதி உள்ளதால் மாதனூர் எல்லைப் பகுதியில் நெடுஞ்சாலைத் துறைமூலம் பயணியர் விடுதி கட்ட அரசு முன்வருமா தங்கள் துறைக்கு சம்பந்தமில்லை என்றாலும், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர்மூலம் நிதிநிலை அறிக்கையில் அறிவித்த அகரஞ்சேரி மேம்பாலம், பள்ளமங்கலம், பள்ளிக்குப்பம் சிறு பாலப் பணியினை மேற்கொள்ள அரசு முன்வருமா

அமைச்சர் எ.வ. வேலு: ரெட்டித் தோப்பு இரயில்வே மேம்பாலம் என்பது, இப்பொழுது எதிர்க்கட்சியாகஇருக்கிறவர்கள் ஆளும் கட்சியாக இருந்த பொழுது, ஒரு நாடாளுமன்றத்தினுடைய இடைத்தேர்தல் நடைபெற்றது. நான் அப்போது சட்டமன்ற உறுப்பினராக இருந்த காலகட்டங்கள். அந்த ரெட்டித் தோப்பு பகுதியிலே என்னை தேர்தல் பொறுப்பாளராக நியமித்திருந்தார்கள். அந்தப் பகுதியில் இருக்கிற மக்களெல்லாம் நகரப் பகுதியிலிருந்து ரெட்டித்தோப்புக்கு செல்ல வேண்டுமென்று சொன்னால், இரயில்வே பாலத்தைக் கடந்துதான் செல்ல வேண்டும். அல்லது underpass என்ற அடிப்படையில் போகிற பொழுது, மழைக்காலங்களில் யாரும் போகமுடியாக நிலை. இப்படிப்பட்ட நிலையில் அந்தப் பகுதியில் உள்ள மக்களெல்லாம் கோரிக்கை வைத்தார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்தால் அந்த ரெட்டித் தோப்பு பாலத்தைக் கட்டாயம் கட்டித் தருவோம் என்று அப்போது நாங்கள் சொன்னோம்.

இந்த உத்தரவாதத்தை எதிர்க்கட்சியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது நான் சொல்லிவிட்டுவந்தேன். ஆனால், அப்போது முதலமைச்சர் அவர்கள் என்னை நெடுஞ்சாலைத் துறையின் அமைச்சராக நியமனம் செய்வார் என்பது தெரியாத காலகட்டம், அந்தக் காலகட்டம். ஆனாலும், இந்த நெடுஞ்சாலைத் துறை அமைச்சராக நான் பொறுப்பேற்ற தற்குப் பின்னர், அதற்கு முக்கியத்தும் அளித்து, மரியாதைக்குரிய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டிருந்த ரெட்டித் தோப்பு பாலத்தின் மேம்பாலப் பணிக்காக ஆரம்பக் கட்டத்தில் ரூ.5.50 கோடி செலவில் 3,300 சதுர அடி நிலம் கையகப்படுத்துவதாக முடிவு செய்யப்பட்டது. உடனேயே அப்பகுதியின் பொதுமக்கள் அதற்கு ஆட்சேபணை தெரிவித்துள்ளார்கள். யார் பாலத்தைக் கேட்டார்களோ, அவர்களே ஆட்சேபணை தெரிவிக்க வேண்டிய சூழ்நிலை வந்தது. அதன் alignmentஐ மாற்றியமைக்க வேண்டுமென்ற காரணத்தால் ஒரு முறைக்கு 3 முறை கூட்டங்கள் கூட்டப்பட்டு, அப்பகுதி மக்களை அழைத்துப் பேசி, அதன் பின்னர் நேர்பாதை மாற்றியமைக்கப்பட்டு, மீண்டும் பொதுமக்களுடன் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டு, அதனடிப்படையில் இரயில்வே மேம்பாலத்திற்காக 2,300 சதுர அடி பரப்பளவு கூடுதலாக நிலம் எடுக்கப்பட வேண்டிய சூழ்நிலை வந்தது. அதனடிப்படையில் ரூபாய் 6.00 கோடி செலவில் கூடுதல் நிலம் கையகப்படுத்தப்பட்டு, இன்றைக்கு அந்தப் பணி முடியும் தருவாயில் இருக்கிறது. தற்போது முதலமைச்சர் அவர்கள் 66 கோடி ரூபாய் மேம்பாலப் பணிக்காக நிதி ஒதுக்கித் தந்துள்ளார்கள். தற்போது ஒப்பந்தம் கோரப்பட்டிருக்கிறது. மேலும் ஒரு வார காலத்தில் ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டு, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ரெட்டித் தோப்புப் பாலம் மற்றும் நான் வாக்குறுதி அளித்த அந்தப் பாலமும் கட்டாயமாக நிறைவேற்றப்படும்.

அ.செ. வில்வநாதன்: அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் துறைக்கு சம்பந்தம் இல்லாத கேள்வியை வைத்துள்ளேன். அதனையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நன்றியை சொல்லிக்கொள்கிறேன்.

அமைச்சர் எ.வ. வேலு: அவையில் இருக்கின்ற பெரும்பான்மையான சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிக்கு ஒரு விடுதி வேண்டும், விருந்தினர் மாளிகை வேண்டும் என்ற அடிப்படையில் சட்டமன்றப் பேரவையில் இந்தக் கோரிக்கைகளை தொடர்ந்து எழுப்பிவருகிறார்கள். அதனடிப்படையில்தான் மாதனூர் பகுதிக்கும் வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அடுத்த முறை 2026 ஆம் ஆண்டில் நிதிநிலை அறிக்கையை திராவிட மாடல் ஆட்சிதான் கட்டாயம் தயார் செய்யும். அதில் எந்தவித மாற்றமும் இருப்பதற்கு வாய்ப்பில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அப்போது முதலமைச்சரிடத்தில் கலந்தாலோசித்து தொகுதிக்கான சுற்றுலா மாளிகை கட்டித் தருவதை கொள்கை அடிப்படையில் எடுத்துக்கொண்டு அதற்கான முயற்சியை நான் செய்வேன்.

இவ்வாறு விவாதம் நடைபெறுகிறது.

வேலூர் மாநகராட்சியில்

நேதாஜி மார்க்கெட்டை முழுமையாகக் கட்டித் தர வேண்டும்!

சட்டப்பேரவையில் – ப.கார்த்திகேயன் கோரிக்கை!

சென்னை, பிப். 21 - சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின் போது வேலூர் தொகுதி ப.கார்த்திகேயன் கேட்ட கேள்வியும் அக்கேள்விக்கு அமைச்சர் கே.என்.நேரு அளித்த பதிலும் வருமாறு:

ப. கார்த்திகேயன்: நம்முடைய கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். மூலக் கேள்விக்கு சம்பந்தம் இல்லை என்று சொன்னாலும், துறை அமைச்சர் அவர்களிடம் என்னுடைய

வேலூர் தொகுதி, வேலூர் மாநகராட்சியில் நேதாஜி மார்க்கெட்டை முழுமையான மார்க்கெட்டாக கட்டித் தர வேண்டுமென்று தொடர்ந்து கேட்டுக் கொண்டு வருகிறேன். நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் அதை செய்து தருமாறு கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

அமைச்சர் கே.என். நேரு: நான் கடந்த காலமாகிய 20 ஆண்டுகளுக்கு முன்பு நடைபெற்றதைச் சொல்கிறேன். உறுப்பினர் கார்த்திகேயன் அவர்கள் அப்போது வேலூர் Chairman ஆக இருந்தார். முதன்முதலாக bus standக்கு நாங்கள் பால் பண்ணைநான் கூட்டுறவுத் துறை அமைச்சராக இருந்தபோது, பழப்பண்ணையை அவர்களுக்கு கொடுத்தோம். இப்போது வேலூருக்கு புதிய bus stand கட்டிக் கொடுத்துவிட்டோம். இப்போது மார்க்கெட் கேட்டிருக்கிறார். கவனத்தில் கொள்கிறோம். விரைவில் செய்து தர அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

செங்கம் தொகுதி – பீமாரப்பட்டி கிராமத்தில்

மலைவாழ் மக்களுக்கான கூட்டுறவுச் சங்கத்திற்கு புதிய கட்டிடம் தேவை!

சட்டப் பேரவையில் – செங்கம் மு.பெ.கிரி கோரிக்கை!

சென்னை, பிப். 21 - சட்டப் பேரவையில் செங்கம் தொகுதி உறுப்பினர் மு.பெ.கிரி கேட்ட கேள்வியும், அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் அளித்த பதிலும் வருமாறு:

மு.பெ. கிரி: செங்கம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தண்டராம்பட்டில், பீமாரப்பட்டி என்கிற கிராமத்தில் மலைவாழ் மக்களுக்கென்று தனியாக ஒரு கூட்டுறவுச் சங்கத்தை 2 ஆண்டுகளுக்கு முன்பு முதலமைச்சர் அவர்களின் ஒப்

புதலோடு அறிவித்து, தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதற்கு கட்டடம் இல்லாமல், ஒரு சிறிய அரசுக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்தக் கட்டடத்தை இந்த ஆண்டே கட்டித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா ?

அமைச்சர் கேஆர். பெரியகருப்பன்: உறுப்பினர்கள் எல்லோரும் புதிய கட்டடங்களைக் கோரிக்கையாக வைத்திருக்கிறார்கள். கோரிக்கை வைப்பதை விட அவர்களே செய்து கொள்வதற்கான ஒரு வாய்ப்பும் இருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலும் பெரும்பாலான கடைகள் கட்டப்படுகின்றன. அந்த அடிப்படையில், அவர் ஏற்கெனவே கோரிக்கை வைத்தார். அவரே (குறுக்கீடு) சங்கம், சங்கக் கட்டடம், யூனியன் நிதியிலிருந்து அதைச் செய்வதற்கு ஏற்கெனவே அவர் சொல்லியிருந்தார்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.